The Hindu (English)
Dated: 13-07-2024

# Three-tier security for Vikravandi vote count

The Hindu Bureau
VILLUPURAM

All arrangements have been made for the counting of votes polled in the Vikravandi Assembly bye-election at the Government Higher Secondary School on Saturday.

Official sources said that three-tier security – provided by the CISF, the Central Armed Police Forces, and the Tamil Nadu Special Police – will be in place till the counting of the votes was completed. In addition, special police teams – comprising three Deputy Superintendents of Police, three inspectors, and 24 sub-inspectors – will provide round-the-clock security at the counting centre, which has been brought under CCTV surveillance.

Postal ballots will be counted first, and the votes polled in the Electronic Voting Machines will be counted from 8.30 a.m. Mobile phones will not be allowed into the counting centre. The strong room will be opened in the presence of the agents of the political parties.

District Election Officer and Collector C. Palani said that 14 tables had been placed for the counting. There will be three persons at each table, including a micro-observer. The results will be announced at the end of each round.

Daily Thanthi

Dated: 13.07.2024

### விக்கிரவாண்டியில் வெற்றிபெறப்போவது யார்?

# இன்று வாக்கு எண்ணிக்கை

## காலை 11 மணிக்கு முன்னணி நிலவரம் தெரியவரும்

விழுப்புரம், ஜூலை.13-
விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் பதிவான ஓட்டுகள் இன்று (சனிக்கிழமை) எண்ணப்படுகிறது. காலை 11 மணிக்கு முன்னணி நிலவரம் தெரியவரும்.

**82.47 சதவீதம் வாக்குகள் பதிவு**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி மரணம் அடைந்ததால் அங்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயா உள்பட 29 பேர் போட்டியிட்டனர். இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 10-ந்தேதி நடைபெற்றது.

மொத்தம் 276 வாக்குச்சாவடிகளில், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்களில் 1 லட்சத்து 95 ஆயிரத்து 495 பேர் வாக்களித்தனர். இது 82.47 சதவீத வாக்கு பதிவாகும்.

ஓட்டுப்பதிவு முடிவடைந்ததும், வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணும் மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

**இன்று வாக்கு எண்ணிக்கை**

பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் இந்த தேர்தலில் வெற்றி பெறப்போவது யார் என்பது இன்று (சனிக்கிழமை) நடைபெறும் வாக்கு எண்ணிக்கையில் தெரியவந்துவிடும்.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. இதையொட்டி காலை 7.30 மணியளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையின் சீல் அகற்றப்பட்டு வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட உள்ளது.

**முதலில் தபால் ஓட்டுகள்**

அதுபோல் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இருந்து தபால் வாக்குச்சீட்டுகள் அடங்கிய பெட்டிகளும் கொண்டு வரப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதும் முதலாவதாக தபால் வாக்குகள் எண்ணப்பட உள்ளது.

இதற்காக அங்குள்ள தனி அறையில் 2 மேஜைகளில் தபால் வாக்குகள் எண்ணப்படும். அதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகள் எண்ணப்படுகிறது.

இதற்காக மற்றொரு அறையில் 14 மேஜைகள் போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மேஜையிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நிகழ்வுகளை சி.சி.டி.வி. மூலம் கண்காணிக்கவும், வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கையானது, 20 சுற்றுகளாக நடைபெற உள்ளது.

**முன்னணி நிலவரம்**

காலை 11 மணிக்கு மேல் முன்னணி நிலவரங்கள் தெரியவரும். மதியத்துக்கு மேல் வெற்றி நிலவரமும் தெரிந்துவிடும்

வாக்கு எண்ணும் பணியில் 14 கிராம உதவியாளர்கள், தாசில்தார்கள், துணை தாசில்தார்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள், ஊழியர்கள் என 150 பேர் ஈடுபடுகின்றனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**பலத்த பாதுகாப்பு**

எந்த அசம்பாவிதமும் ஏற்படாமல் அமைதியான முறையில் வாக்கு எண்ணிக்கையை நடத்தி முடிக்க ஏதுவாக, வாக்கு எண்ணும் மையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. திஷாமித்தல், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தீபக் சிவாச் ஆகியோர் தலைமையில் 4 கூடுதல் போலீஸ் சூப்பிரண்டுகள், 7 துணை போலீஸ் சூப்பிரண்டுகள், 28 இன்ஸ்பெக்டர்கள், 86 சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார், தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர், துணை ராணுவப்படையினர் என 1,195 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

The votes cast in the Vikravandi assembly constituencies by-election will be counted today (13.07.2024)

Dinamani

Dated: 13.07.2024

# விக்கிரவாண்டி: இன்று வாக்கு எண்ணிக்கை

விழுப்புரம், ஜூலை 12: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை சனிக்கிழமை (ஜூலை 13) காலை 8 மணிக்கு தொடங்குகிறது.

வாக்கு எண்ணிக்கை 20 சுற்றுகளாக நடைபெறும் நிலையில், பகல் 12 மணிக்குள் வெற்றி நிலவரம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி திமுக உறுப்பினர் நா.புகழேந்தி உடல்நலக் குறைவால் உயிரிழந்த நிலையில், அந்தத் தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு ஜூலை 10-ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது.

திமுக சார்பில் அன்னியூர் அ.சிவா, பாமக சார்பில் சி.அன்புமணி, நாதக சார்பில் பொ.அபிநயா உள்ளிட்ட 29 பேர் தேர்தலில் போட்டியிட்டனர். 82.48 சதவீத வாக்குகள் பதிவாகின.

**20 சுற்றுகள்:** வாக்கு எண்ணிக்கை சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கும். முதலில் தபால் வாக்குகள் எண்ணும் பணியும், அதைத் தொடர்ந்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியும் நடைபெறும்.

இதற்காக வாக்கு எண்ணிக்கை மையத்தில் 14 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. 20 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

பாதுகாப்பு அறையிலிருந்து வாக்குப் பதிவு இயந்திரங்களைக் கொண்டுசெல்லும் பணிக்கு கிராம உதவியாளர்கள், இதர பணிகளுக்காக வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், இதர பணியாளர்கள் என மொத்தம் 150 பேர் வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Today's the counting of votes in vikravandi assembly constituency

Dinamani, Dated: 13.07.2024

# தேர்தல் பத்திர திட்ட முறைகேடு: சிறப்பு விசாரணை கோரும் மனு ஏற்பு



புது தில்லி, ஜூலை 12: ரத்து செய்யப்பட்ட தேர்தல் நிதிப் பத்திர திட்ட முறைகேடு தொடர்பாக நீதிமன்றக் கண்காணிப்பின் கீழ் சிறப்பு விசாரணைக் குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

பொது நலனுக்கான தன்னார்வ அமைப்பு மற்றும் பொது நல வழக்கு விவகாரங்களுக்கான மையம் ஆகியவை சார்பில் இந்தப் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

'தேர்தல் நிதிப் பத்திர திட்டம் மிகப் பெரிய முறைகேடு. தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில், போலி மற்றும் நஷ்ட வரவு-செலவு கணக்குகளைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் சார்பில் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நிதிப் பத்திர திட்டத்தின் கீழ் நன்கொடை அளிக்கப்பட்டிருப்பது குறித்து விசாரணை நடத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு போலிக் கணக்குகளைக் காட்டி கிடைத்த குற்ற வருவாய் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நிறுவனங்கள் அளித்த நன்கொடைகளைப் பறிமுதல் செய்யவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்' என்று அந்த மனுவில் கோரப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வில் வெள்ளிக்கிழமை பரிசீலனைக்கு வந்தது.

அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண், 'இந்த மனு தொடர்பாக உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அணுகியும், இன்னும் மனு விசாரணைக்குப் பட்டியலிடப்படவில்லை' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், மனுவை விசாரணைக்குப் பட்டியலிட ஒப்புக்கொண்டனர்.

அரசியல் கட்சிகளுக்கு வெளிப்படைத்தன்மையுடன் நன்கொடை அளிக்கும் நடைமுறை என்ற பெயரில் தேர்தல் நிதிப் பத்திர திட்டத்தை மத்திய அரசு கடந்த 2017-ஆம் ஆண்டு அறிவித்து, 2018-ஆம் ஆண்டுமுதல் நடைமுறைக்கு கொண்டுவந்தது. இந்த திட்டம் மூலம் ஆளும் பாஜக பெருமளவு பலனடைந்தது தெரியவந்தது.

இந்நிலையில், 'இத் திட்டம் அரசமைப்பு சட்டப் பிரிவு 19(1)(ஏ)-இன் கீழ் தகவல் பெறும் உரிமைக்கு எதிரானது; சட்டவிரோதமானது' என்று கடந்த பிப்ரவரி 15-ஆம் தேதி குறிப்பிட்ட உச்சநீதிமன்ற 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, தேர்தல் நிதிப் பத்திர திட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டது.

மேலும், உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, இத் திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு அளித்த நன்கொடை விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

The Supreme court has accepted for hearing a petition filed seeking an order for a Special investigation committee to conduct a court monitored probe into the cancellation election bond scheme scam.